மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.52/2022</u>

2026ம் ஆண்டு ஜுலை 02ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கீதா | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.07.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தந்தை சுந்தர மனோகரனுக்கு என் தாயார் கண்ணம்மாளும் 1ம் பிரதிவாதியும் மனைவிகள் என்று சொன்னால் சரிதான் என் தாயார் இறந்ததற்கு பின்னிட்டு தான் என் தகப்பனார் சுந்தர மனோகரன் என்பவர் 1ம் பிரதிவாதியை சட்டபடியாக திருமணம் செய்து கொண்டார் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் சுந்தரம் மனோகரன் என்பவருக்கு முதல் மனைவியான என் தாயார் கண்ணம்மாள் மூலம் நானும், 2ம் வாதியில் வாரிசு என்று சொன்னால் சரிதான்.

2. எங்களைத் தவிர என் பெற்றோருக்கு வேறு யாரும் வாரிசுகள் இல்லை என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி அன்னபூரணி என்பவருக்கும், என் தகப்பனார் சுந்தர மனோகரன் என்பவருக்கும் 4ம் பிரதிவாதியை தவிர வேறு குழந்தைகள் யாரும் இல்லை என்று

சொன்னால் சரிதான். எங்களை வாரிசுகளாக சேர்க்காமல் 1ம் பிரதிவாதி வாரிசு சான்று பெற முயன்றதால் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தோமா என்றால் இல்லை.

3. 1ம் பிரதிவாதிக்கு முதல் கணவர் மூலம் பிறந்த பெண் குழந்தையும் சேர்த்து என் தகப்பனாரின் வாரிசாக கண்டு வாரிசு சான்றிதழ் பெற முயற்சி செய்ததால் தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தோம். என் தகப்பனார் சுந்தர மனோகரன் என்பவரின் வாரிசுகளாக என்னையும், 2ம் வாதியையும் மற்றும் 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதி ஆகியோர்களை வாரிசுகளாக கண்டு வாரிசு சான்றிதழ் பெற்றுக்கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் 1ம் வாதி என்றால் ஆமாம். 2ம் வாதி என்னுடைய தம்பி. என் தாயார் பெயர் கண்ணம்மாள். என் தகப்பனார் பெயர் சுந்தர மனோகரன். என் பெற்றோருக்கு நானும், என் உடன் பிறந்த சகோதரரான 2ம் வாதியும் மட்டும்தான் வாரிசுகள் வேறு யாரும் இல்லை. என் தகப்பனார் சுந்தர மனோகரன் என்பவரின் தாயார் பெயர் கல்யாணி. அவர் தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் இல்லை. கல்யாணி இறந்து எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 12 ஆண்டுகள் இருக்கும். என் பாட்டி கல்யாணி என்பவரின் இறப்பு பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் சுப்பிரமணியம் அவர் என் தகப்பனார் சிறுவயதாக இருந்தபோது இறந்து விட்டார். மேற்படியாரின் இறப்பு பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் கண்ணம்மாள் என்பவர் 2012 ஆம் ஆண்டு இறந்துவிட்டார்

என் தாயார் இறந்ததற்கு பின்னிட்டு தான் என் தகப்பனார் 1ம் பிரதிவாதியாகிய அன்னபூரணி என்பவரை திருமணம் செய்து கொண்டாரா என்றால் ஆமாம். அது பற்றி எனக்கு ஆட்சேபனைகள் இல்லையா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதிக்கு 4ம் பிரதிவாதி தவிர வேறு யாரேனும் குழந்தைகள் உள்ளார்களா என்றால் ஆமாம்.

3. ஒரு மகள் உள்ளார் அவர் பெயர் ரேவதி. அவர் என் தகப்பனாரும் 1ம் பிரதிவாதியும் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே 1ம் பிரதிவாதிக்கும் அவருடைய முதல் கணவருக்கும் பிறந்த மகள் ஆவார். என் தகப்பனாருக்கும் 1ம் பிரதிவாதிக்கும், 4ம் பிரதிவாதியை தவிர வேறு யாரேனும் குழந்தைகள் உள்ளார்களா என்றால் இல்லை. என் தகப்பனாருக்கு முதல் மனைவி மூலம் பிறந்த வாரிசுகளான என்னையும், 2ம் வாதியையும் மற்றும் 2ம் மனைவியான முதல் பிரதிவாதி மற்றும் அவர் மூலம் பிறந்த 4ம் பிரதிவாதி ஆகியோர்களை தவிர வேறு யாரேனும் வாரிசுகள் உள்ளார்களா என்றால் இல்லை.

4. என் தகப்பனாருக்கு என்னையும் 2ம் வாதியையும் மற்றும் 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதி தவிர வேறு யாரேனும் வாரிசுகள் உள்ள விபரம் தெரிய வந்தால் எங்களுக்கு வழங்கப்படும் வாரிசு சான்றிதழை 2, 3 பிரதிவாதிகள் ரத்து செய்து கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபனை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

**<u>4ம் பிரதிவாதி தரப்பில் நீதிமன்ற பாதுகாவலர் குறுக்கு விசாரணை</u>**

1. இறந்து போன என் தகப்பனாரான சுந்தர மனோகரன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்று சொன்னால் சரிதான். என் தாயார் கண்ணம்மாள். என் தகப்பனாரின் முதல் மனைவி. என் தயாரான கண்ணம்மாள் இறந்ததற்கு பின்னிட்டு தான் என் தகப்பனார் 1ம் பிரதிவாதியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார்

என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும் என் தகப்பனார் சுந்தரம் மனோகரனுக்கு சட்டப்படியான வாரிசு என்றால் சரிதான்.

2. என் தகப்பனாரின் பெற்றோர் பெயர் சுப்பிரமணியம் மற்றும் கல்யாணி. அவர்கள் தற்போது உயிரோடு இல்லை என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் 1ம் பிரதிவாதியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதற்கு பின்பு அவர்களுக்கு 4ம் பிரதிவாதி வாரிசாக பிறந்தார் என்று சொன்னால் சரிதான். இறந்து போன என் தகப்பனார் சுந்தர மனோகரன் என்பவருக்கு மைனரான 4ம் பிரதிவாதியும் சட்டப்படியான வாரிசு என்று சொன்னால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.02 19:46:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்